# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


VOL - 26
ஆண்டு சந்தா ரூ. 100/-

மார்ச் - MARCH
தனிப் பிரதி ரூ. 10/-

2025
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-






ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

*இதழின் உள்ளே...*

ஆசிரியர் உரை 3

பெண்கள் பகுதி 8

வாலிபர் பகுதி 10

சிறுவர் பகுதி 11



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

*ஆசிரியர் குழு*

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

*சட்ட ஆலோசகர்கள்*

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**


**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள்
மற்றும் திருமண நாள் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
அன்பின் வாழ்த்துக்கள்...


நமது
**'கிருபையின் கீதங்கள்'**
பாடல் புத்தகம்
புதிய பதிப்பு
ஆயத்தமாக உள்ளது.

554 தமிழ் பாடல்கள்
40 ஆங்கில பாடல்கள்
112 சேர்ந்திசை பாடல்கள்
464 பக்கங்கள்

வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும் : 92 4431 4431, 999 426 7004

**கிருபையுள்ள வார்த்தை**
நாம் கர்த்தருடைய சபையில் நிலைநிற்க உதவும்,
நித்தியமானவரின் வார்த்தை

YouTube
@graciouswordcoc



**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆசிரியர் உரை

Dr. P.C. பிலேமோன் ராஜா



# ஆவிக்குரிய குடும்பம்

## Spiritual Family

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் ஈடுஇணையற்ற நாமத்தில் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

சென்ற மாதம் சரீரபிரகாரமான குடும்பத்தின் நோக்கத்தினை பற்றி படித்தோம் அல்லவா? இந்த மாதம் ஆவிக்குரிய குடும்பத்தினை பற்றி தியானம் செய்வோம்.

ஆவிக்குரிய குடும்பம் என்பது கர்த்தருடைய சபையை குறிக்கும் என்பது நாம் அறிந்ததே **(1 தீமோத்தேயு 3:15)**. அந்த ஆவிக்குரிய குடும்பமாகிய சபையின் மதிப்பு, நோக்கம், பொறுப்பு நமக்கு தெரிந்திருக்க வேண்டும் மற்றும் அவைகள் நிறைவேறவும், மகிமைப்படவும் உழைக்கவும், அதற்காக பிழைக்கவும் வேண்டும். அப்பொழுதுதான் தேவசித்தம் நிறைவேற நாம் உபயோகமான பாத்திரமாக இருக்க முடியும்.

### 1. மதிப்பினை அறிவோம்:

**எபேசியர் 3:9-11** "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக"

ஆவிக்குரிய குடும்பமாகிய சபையின் மதிப்பினை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். சபை என்பது பரலோக பிதாவின் பெரிய கனவு ஆகும். அவர் உலகத்தினை படைக்குமுன்பே, தனக்குள் கொண்டிருந்த தரிசனமாகும். அதனை பற்றி பல நூற்றாண்டுகளாக தீர்க்கத்தரிசனமாக மக்களுக்கு ஒவ்வொரு காலகட்டத்திலும், தம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு அறிவித்துக்கொண்டே வந்தார். அவர் நம்மிடத்திலும், நாம் அவருக்குள்ளும் வாழும்படியாக அவர் உருவாக்கிய அவரது கனவு திட்டமாகும். அதனை அவரே திட்டமிட்டார், தீர்க்கத்தரிசனமாக முன்னுரைத்தார், தமது குமாரனைக்கொண்டு வாக்குரைத்தார் மற்றும் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக பெந்தெகொஸ்தே நாளிலே, எருசலேம் நகரிலே அதனை தாம் சொன்னபடியே, அவரது குமாரனும் நமது ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நிறைவேற்றவும் செய்தார். பரலோக பிதா பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக கனவு கண்டு உருவாக்கிய ஒன்றை நாம் சாதரணமாக எண்ணிவிடக்கூடாது. எல்லா சபையும் ஒன்று தான். எங்கே போனால் என்ன? எல்லா நதியும் கடலில் போய் கலக்குற மாதிரி, நாம் கடவுளோடு போய் கலந்துவிடுவோம் என தத்துவங்களை பேசிக்கொண்டு, பரலோக பிதாவின் தரிசனத்தினை, சாதாரணமாக்கலாமா? சற்றே நிதானிப்போம்.

**அப்போஸ்தலர் 20:28** "ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்."

அழிந்துபோக போகின்ற, சிதைந்து போகின்ற உயிரற்ற கட்டிடங்கள், பாலங்களை கட்டுவதற்கு, உருவாக்குவதற்கு நமது ஊரில் பறவைகளையோ, விலங்குகளையோ பலியிடுவார்கள் என்று நாம் கேள்விப்பட்டிருப்போம். அது உண்மையா இல்லையா என நாம் அறியோம். ஆனால், சபையை உருவாக்க, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, தன்னைத்தானே பலியாக கொடுத்துள்ளார் என்பது உறுதியான சத்தியமாக இருக்கின்றது.

கிறிஸ்துவிற்கு அவரது உயிரைவிட சபை என்பது மதிப்புமிக்கதாக இருக்கிறதென்றால், நமக்கு எப்படி இருக்க வேண்டும்? மேலும், கிறிஸ்து அதற்காக பரலோக மகிமையை விட்டிறங்கி, நம்மைப்போல மாம்சமாகி இம்மண்ணில் பிறந்தார். நமக்காக வந்த அவரை, நாம் புறக்கணித்தோம், அவமதித்தோம், நிந்திந்தோம், மகிமையான அவர் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டார். பசியோ, தாகமோ இல்லாமல் பரலோகில் இருந்தவர், இங்கே பூமியில் பசியுடன், தாகத்துடன், இருக்க இடமின்றி அலைந்து திரிந்தார் **(அப். 10:38; மத்தேயு 8:20)** என்பதனை பைபிளில் நாம் படிக்கும்போது, அவர் சபையினை எவ்வளவு உயர்வாக நினைக்கின்றார் மற்றும் நேசிக்கின்றார் என்பதனை நாம் அறிய முடியும். நாம் எவ்வாறு நினைக்கின்றோம்? எவ்விதம் நேசிக்கின்றோம்?

அப்படிப்பட்ட மணவாளனுடைய (கிறிஸ்து) பெயரை தரியாமல், மாற்று பெயர்களை சபைக்கு நாம் தரித்துக்கொள்வது, கிறிஸ்துவை அவமானப் படுத்துவதாக இருக்குமல்லவா? யூதர்களும் ரோமர்களும் சிலுவையில் அறைந்த இயேசுவை, பிதா கிறிஸ்துவாக்கினார் **(அப். 2:38)**, அவருடைய பெயரையே எல்லாவற்றிற்கும் மேலானதாக்கினார் **(அப். 4:12)** முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவின் சபையார் **(ரோமர் 16:16)** என்றே அழைக்கப் பட்டுள்ளனர். இன்று நாம் நமக்கு பிடித்த பெயர்களை, கிறிஸ்துவினுடைய பெயருக்கு மாற்றாக வைத்துக்கொள்வது, அவருக்கு மகிமையாக இருக்குமா? என்பதனை நிதானித்து அறிவோம்.

**அப்போஸ்தலர் 9:31** “அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின.”

பல்வேறுப்பட்ட இடங்களில் கூடி வந்த சபைகள், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடு நடந்து பெருகின என்பதனை நாம் படிக்கும்போது, சபைக்காக பரிசுத்த ஆவியானவரின் உழைப்பினை (பிரயாசம்) அங்கே புரிந்துக்கொள்ள முடியும். ஆண்டவர் இயேசுவின் பிறப்பிலிருந்து மறுவருகை வரை பரிசுத்த ஆவியானவரின் உழைப்பு மிகப்பெரியது என்பதனை நாம் புரிந்துக்கொள்ள முடியும் (மத்தேயு 1:18; வெளி. 22:17). சபையின் வளர்ச்சியில் ஆவியானவரின் பிரயாசங்களை நாம் வேத வசனங்களின் துணைக்கொண்டு அறிய முடியும் (அப். 2:4, 8:29,39; 10:19,44; 11:12,15,28; 21:11; ரோமர் 8:16,26; 1 கொரி. 6:19; வெளி. 2:7).

மேலும், அந்த வசனங்களிலே சபைகள் என்று குறிப்பிடுவது, நிறைய சபைகள் என்பதாக அல்ல, நிறைய இடங்களில் (எருசலேம், சமாரியா, யூதேயாவின் பிற பகுதிகளில்) என்பதாகும். இடங்கள் தான் வேறு, சபை என்பது ஒன்றுதான் இருந்தது. அதனால் தான் சபையை குறிப்பிடும்போது, இடங்களை சொல்லி குறிப்பிட்டு காண்பித்தனர். எபேசு சபை (எபேசு பட்டணத்தில் இருந்த சபை), கொலேசெ சபை, பிலிப்பி சபை, சிமிர்னா சபை என்பது பல்வேறுபட்ட இடங்களில் இருந்த கிறிஸ்துவின் ஒரே சபையை குறிப்பதாகும். கிறிஸ்து தம் சபையை கட்டுவேன் என்று ஒருமையில் சொன்னார் (மத்தேயு 16:18,19), ஒன்றை தான் உண்டாக்கினார் (அப். 2:47), சபை ஆரம்பித்து ஏறக்குறைய 400 ஆண்டுகள் எந்த ஒரு பிரிவினை சபையும் உண்டாகவில்லை என்பதே வரலாறு ஆகும்.

(எபிரெயர் 10:32-34) சபையின் மதிப்பு என்பது பரலோக பிதாவின் கனவு, ஆண்டவர் இயேசுவின் உயிர், பரிசுத்த ஆவியானவரின் உழைப்பு மாத்திரமல்ல, அது கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மற்றும் எண்ணற்ற பரிசுத்தவான்களின் தியாகத்தினையும் உள்ளடக்கியுள்ளது. அவர்கள் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தனர். நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் மற்றவர்களால் வேடிக்கையாக்கப்பட்டனர், தங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தனர் மற்றும் இரத்த சாட்சிகளாகவும் சபைக்காக மரித்தனர் (அப்.7:59,60; 12:1-4; 4:33-37; 8:1-4).

ஆகையால் தான், சபை கூடிவருதலை எக்காரணத்திற்காகவும் தவறவிட்டுவிடாதீர்கள் என்று ஆவியானவர் அறிவுறுத்துகின்றார். அப்படி தவறவிடுகின்றவர்கள் கிறிஸ்துவை காலின்கீழ் போட்டு மிதிக்கின்றனர் என்றும், ஆவியானவரை நிந்திக்கின்றனர் என்றும், மனப்பூர்வமாக பாவம் செய்கின்றனர் என்றும் அவர்கள் தேவ தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என்றும், அது மிகவும் பயங்கரமாக இருக்கும் என்றும் எச்சரிக்கின்றார் (எபி 10:24-31). அதனால் ஒருமுறை போகாவிட்டால் என்ன, நான் போகவிட்டால் ஒன்றும் குறையபோவதில்லை என்றும், வேலை, படிப்பு, பணம்,


**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

**வங்கிக் கணக்கில் செலுத்த,**

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

திருமணம் மற்றும் இன்னும் பல்வேறு காரணங்களை நியாயப்படுத்தி சபைகூடிவருதலை தவறவிட வேண்டாம். பிதாவின் தரிசனத்தினை, கிறிஸ்துவின் தியாக பலியினை, பரிசுத்த ஆவியானவரின் பிரயாசத்தினை மற்றும் பரிசுத்தவான்களின் தியாகத்தினை சாதாரணமாக்கிவிடாதிருப்போம். நம்மைநாமே நிதானித்து அறிந்து செயல்படுவோம்.

## 2. நோக்கத்தினை அறிவோம்:

**ஏசாயா 2:2-4** "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்.."

ஆவிக்குரிய குடும்பமாகிய சபையின் மதிப்பினை அறிந்த நாம், அதனின் நோக்கத்தினையும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். எல்லா மக்களினங்களும் அதற்கு ஓடிவருவார்கள் என்பது, சபையின் நோக்கம் எல்லா மக்களினங்களையும் தனக்குள் கூட்டிசேர்ப்பதாகும். அதாவது எல்லா மக்களையும் இரட்சிப்பதாகும். ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது, எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே பிதாவின் சித்தமாகும் (மத்தேயு 18:10), அடுத்ததாக, அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள் என்பதிலிருந்து நாம் அறிவது, கர்த்தருடைய சித்தத்தினை, மனிதன் எப்படி வாழ வேண்டும் என்ற வாழ்வியலை கற்றுக்கொண்டு, கர்த்தருடைய போதனையின்படி நடக்க வேண்டும் என்பதாகும் (மத்தேயு 7:21-25). அவர் ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார். அடுத்ததாக, தவறாக நடக்கின்றவர்களை கடிந்துக்கொண்டு திருத்துவதாகும். பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அனைவரையும் சமமாக்கி, சமாதானத்துடன் வாழ வழிசெய்வதாகும், அதாவது ஒன்றாக்கி. ஒற்றுமையாக வாழ செய்வதாகும் (எபேசியர் 2:11-22).

சபையின் நோக்கம், பாவிகளை இரட்சித்து பரிசுத்தமாக்குவதாகும் (அப். 2:36-38; 1 தீமோ. 1:15), அப்படி இரட்சிக்கப்பட்டு பரிசுத்தமாக்கபட்டவர்களைக் கொண்டு (அப். 2:47), இயேசுகிறிஸ்துவின் வழியாக (மூலமாக) பரலோக பிதாவை மகிமைப்படுத்துவதாகும் (எபேசியர் 3:20,21).

ஆவிக்குரிய குடும்பமாகிய சபையின் நோக்கம், பரலோக பிதாவை மகிமைப்படுத்துதலாகும். சபை என்பது ஆவிக்குரியது. அது பூமிக்குரியது அல்ல, மாறாக பரலோகத்திற்கு உரியது (யோவான் 18:36), அது பரலோக பிதாவை மகிமைப்படுத்த வேண்டும். நாம் சபையாக கூடிவரும்போது, பரலோக பிதா மகிமைப்படுத்தப்படுகின்றாரா? தனிமனித புகழ்ச்சியா? என்ன நடக்கின்றது. சபை என்பது கிறிஸ்துவிற்குரியது (மத்தேயு 16:18), எந்த தனிமனிதனும் உரிமை கொண்டாட முடியாது, தன் விருப்பத்திற்கு எதனையும் உள்ளே நுழைக்கவோ, உள்ளே இருக்கின்றதை வெளியே எடுக்கவோ எந்த மனிதருக்கும் அதிகாரம் இல்லை. அப்படி இருக்க கிறிஸ்து கட்டளையிடாதவற்றை, ஆவியானவரால் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் போதிக்காத கிறிஸ்துவின் உபதேசத்தை, முதல் நூற்றாண்டு சபையார் கடைபிடிக்காத (செய்யாதவற்றை) காரியங்களை, நாம் சபையாக கூடி செய்வது, கர்த்தர் சபையை தோற்றுவித்த நோக்கத்தினை உடைப்பதாக இருக்கும் அல்லவா?

உதாரணமாக, கிறிஸ்து பாடினார் (மத்தேயு 26:30) என்று பைபிளில் சொல்லப்பட்டுள்ளது. அவர் கைதட்டியோ, இசைக்கருவியுடனோ பாடியதாகவோ சொல்லப்படவில்லை. மேலும், அப்படி செய்யும்படியாக எந்த கட்டளையும் அவர் கொடுக்கவும் இல்லை. அவர் கட்டளை கொடுக்காததால், அப்போஸ்தலர்கள் எங்கும் அதனை போதிக்கவில்லை, அவர்கள் போதிக்கவில்லை என்பதால், முதல் நூற்றாண்டு சபையார் கடைபிடிக்கவும் இல்லை (எபே. 5:17-21; கொலோ. 3:16,17). கிறிஸ்துவின் உபதேசமான புதிய ஏற்பாட்டில் எந்த ஒரு வசனத்திலும் இவைகள் காணப்படவில்லை என்பது வெளிச்சமாக இருந்தும். அநேகர் இருளில் நடப்பது ஆச்சரியமாக இருக்கின்றது.

அப்படி தங்கள் சுய விருப்பத்தின்படி செய்கின்றவர்கள் தாவீது பாடினார், ஆடினார் என்கின்றனர். நாம் தாவீதின் போதனையின்படியல்ல, கிறிஸ்துவின் போதனையின்படியே நியாயந்தீர்க்கப்பட போகின்றோம் (யோவான் 12:48).

எல்லா மக்களையும் தாவீது அல்ல, கிறிஸ்துவே நியாயந்தீர்க்க போகின்றார் (வெளிப்படுத்தல் 22:12), மேலும், அந்த தாவீதும், தனக்கும் ஆண்டவராகிய கிறிஸ்துவினாலே நியாயந்தீர்க்கப்பட போகின்றார் என்பதனை நாம் உணர வேண்டும் (1 பேதுரு 4:5; 2 கொரி. 5:10; சங்கீதம் 110:1; எபி. 11:32,39,40).

பரலோக பிதாவை மகிமைப்படுத்துகின்றவர்களை பரலோகம் நோக்கி வழிநடத்துவது சபையின் நோக்கமாக இருக்கின்றது (அப். 14:22). பரலோகம்

செல்ல, நாம் பரம பிதாவின் சித்தப்படியே எல்லாவற்றையும் செய்ய வேண்டும் (மத்தேயு 7:21-23). ஆண்டவர் இயேசு அதனை தெளிவாக சொன்னர், அந்த நாளில், என் நாமத்தினாலே அற்புதம் செய்தோம், அந்நிய மொழிகளை பேசினோம், அசுத்த ஆவிகளை துரத்தினோம் என்று சொன்னால் அது செல்லாது. மேலும், கிறிஸ்து அப்படிபட்டவர்களை அக்கிரமக்காரர்களே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று சொல்லுவேன் என்று சொல்கின்றார். ஆண்டவர் இயேசுவின் பின்னே செல்லாமல், அப்படிபட்டவர்களின் பின்னே செல்கின்றவர்களாக நாம் இருக்கின்றோமா? என்பதனை நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

ஆண்டவர் இயேசுவின் பெயராலே, அந்நிய மொழி பேசுவதும், அசுத்த ஆவிகளை துரத்துவதும், தீர்க்கதரிசனம் சொல்வதும் அக்கிரமமா? இல்லையே. பிறகு ஏன் ஆண்டவர் அவர்களை அக்கிரமக்காரரே என்று அழைக்கின்றார். அவர்கள் ஆண்டவரையும், அவர் போதனையையும் விட்டுவிட்டு, அவரிடம் உள்ளவற்றை (நன்மைகளை) மட்டுமே எடுத்துக்கொண்டனர். பெற்றோர் வேண்டாம், அவர்களின் பணம், நகை, பொருள் மட்டும் வேண்டும் என்று பிள்ளைகள் சொன்னால், அது அக்கிரமம் தானே?

ஆண்டவர் இயேசுவின் பெயராலே, அந்நிய மொழி பேசுவதும், அசுத்த ஆவிகளை துரத்துவதும், தீர்க்கதரிசனம் சொல்வதும் மட்டுமே நம்மை பரலோகம் கொண்டு செல்ல உதவாதெனில், நாம் பரலோகம் செல்ல உதவும் பிதாவின் சித்தம் என்ன? என்று அறிய வேண்டும். பரலோகம் செல்ல வேண்டும் என்பது நமது நோக்கமாக இருக்குமென்றால், பரலோகம் கொண்டு செல்ல பயன்படாதவைகளின் பின்னே, பகட்டாக இருப்பதினை நாம் மாற்ற வேண்டும். ஏனெனில், சபையின் நோக்கம் பாவிகளை இரட்சித்து பரிசுத்தமாக்குதலும், பரலோக பிதாவை மகிமைப் படுத்துவதும், பரலோகம் நோக்கி பயணிப்பதுமாகும்.

## 3. பொறுப்பினை அறிவோம்:

ஆவிக்குரிய குடும்பமாகிய சபையின் மதிப்பினையும், நோக்கத்தினையும் அறிந்த நாம், அதனுடைய பொறுப்புகளையும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். சபைக்கான பொறுப்புகள் மூன்று,
1) நற்செய்தியை நானிலமெங்கும் அறிவித்தல்,
2) சபையை பக்திவிருத்தியடைய செய்தல்,
3) பரிசுத்தவான்களின் குறைவில் உதவி செய்தல் ஆகும்.

**மாற்கு 16:15 "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."**

சபையின் தலையாய பொறுப்பு நற்செய்தியை அறிவிப்பதாகும், அது சபையை உண்டாக்கிய நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சபைக்கு கொடுத்த மிக முக்கியமான கட்டளையாகும் (மத்தேயு 28:18-20). கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட ஒவ்வொருவருமே செய்ய வேண்டிய தலையாய கடமையாகும் (1பேதுரு 2:9). அதனை சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் செய்ய வேண்டும் (2தீமோ 4:2). நற்செய்தியை அறிவியாமல் இருந்தால் தனக்கு பேராபத்து! (ஐயோ!) வருமென, மிகவும் அர்பணிப்போடே கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலமெங்கும் பரப்பிட உழைத்த பவுல் சொன்னதினை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நற்செய்தியை அறிவிக்க, கிறிஸ்து யாரையும் சிறப்பாக சபையில் ஏற்படுத்தவில்லை. **அது மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய அனுதின, அவசர பொறுப்பாகும்.**

எபேசியர் 4:16 ....அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைய செய்வது சபையின் அடுத்த மிகப்பெரிய பொறுப்பாகும் (எபேசியர் 4:12). நற்செய்தி அறிவித்தல் என்பது, சபைக்கு வெளியே இருக்கின்றவர்களை, இரட்சிப்பிற்குள் வழிநடத்தி, சபைக்குள் வரவைப்பதற்கான பொறுப்பு என்றால், பக்திவிருத்தியடைய செய்தல் என்பது அவ்வாறு வந்தவர்களை இன்னும் விசுவாசத்தில் ஆழப்படுகின்ற வேலையாகும். அகலவும் உழ வேண்டும், ஆழவும் உழ வேண்டும் இரண்டுமே சரியாக செய்யப்பட வேண்டும். சபைக்குள்ளே இருக்கினற ஒவ்வொருவரும் மற்றவர்களை பக்திவிருத்தியடைய செய்கின்றவர் களாக இருக்க வேண்டும் (1தெசலோனிக்கேயர் 5:11). சபையில் சகலமும் பக்திவிருத்திக்கேதுவாக செய்யப்பட வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலனாகிய பவுலின் மூலம் கொரிந்தியர் களை கண்டித்தார் (1கொரிந்தியர் 14:26). ஒருவர் கிறிஸ்துவிடம் இன்னும் நெருங்கி சேர நாம் உதவியாக இருக்க வேண்டும். அதுதான் மற்றவர்களின் பக்திவிருத்தியை நாடுவதும், பிறனுக்கானவைகளை நோக்குவதாகும் (2கொரி. 12:19). பக்திவிருத்தி உண்டாக்காதவைகளையும், அவைகளுக்கு தடையாக இருக்கின்றவைகளையும் விட்டு நாம் விலகியிருக்க வேண்டும் (1கொரிந்தியர் 10:23).

**யாக்கோபு 1:27** "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது."

சபையின் மற்றுமொரு முக்கியமான பொறுப்பு, பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்தலாகும் (ரோமர் 12:13). சோர்ந்து போகாமல் நன்மை செய்யும்படி பைபிள் உற்சாகப் படுத்துகின்றது (கலாத்தியர் 6:9). சபையின் பொறுப்பு என்பது சபையில் உள்ள ஒவ்வொருவரும் சபையின் மூலமாக நன்மை செய்ய வேண்டியதாகும் (எபேசியர் 3:21). நாம் நற்கிரியை செய்யம்படியாக படைக்கப் பட்டவர்கள் (எபேசியர் 2:10). இவைகள் பிதாவிற்கு பிரியமான பலிகளாக இருக்கின்றது (எபிரெயர் 13:16). அவைகள் நமக்கு இம்மையிலும் (ரோமர் 2:10) மறுமையிலும் (ரோமர் 2:7) பிரதிபலன்களை பெற்றுத் தருவதாக இருக்கின்றது.

பிரியமானவர்களே, கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையானது இப்பொழுது உலகத்தில் இருக்கலாம். ஆயினும் எப்போதும் அதற்குள் உலகம் இருக்காது. ஏனெனில், அது இவ்வுலகத்திற்கு உரியது அல்ல. ஆகையால் ஏனோதானோவென்று சபையை எண்ணாமல், சபையைபற்றி கவனமாக இருப்போம். என்ன பெயர் இருந்தாலென்ன? என்ன உபதேசம் போதித்தாலென்ன? என நம் மனதிருப்திக்காக சபையை சாதாரணமாக எண்ணாமல், சபையின் நோக்கத்தினையும், மதிப்பினையும், பொறுப்பினையும் உணர்ந்து வாழ்வோம். கர்த்தருடைய நாமத்தினை மகிமைப்படுத்துவோம்.

## சென்ற மாதம் நடைபெற்ற நமது ஊழியங்களில் சில..



திருப்பூர் மாவட்டம், தங்கமேடு பகுதியில் நடைபெற்ற பெண்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டோர்



பார்வையுள்ளோருக்கு புத்தகங்களை அனுப்ப ஆயத்தம் செய்யும் பார்வையற்ற சகோதர, சகோதரிகள்















ஆப்பிரிக்கா நாடுகளில் நடைபெற்ற ஊழியங்களில் நமது இதழின் ஆசிரியரும், இணைஆசிரியர் கிங்ஸ்லி அவர்களும்..



பெண்கள் பகுதி

# நோக்கமுள்ள பெண்

அன்புள்ளம் கொண்ட பெண்களே! உங்கள் யாவரையும் அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். உங்கள் அனைவருக்காகவும் ஜெபிக்கின்றேன்.

நம்முடைய பிதாவாகிய தேவன் நம்மை படைத்ததின் நோக்கத்தை நிறைவேற்றுவதே நம்முடைய வாழ்க்கையாக இருக்க வேண்டும். அப்படியென்றால், முதலில் நோக்கத்தை தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா?

முதலில் ஆதாம் உருவாக்கப்பட்டார் பின்பு அவருக்கு ஏற்ற துணையாக ஏவாள் ஆதாமுடைய எலும்பிலிருந்தே உருவாக்கப்பட்டாள் (ஆதி. 2:21,22) ஒரு மனிதனுக்கு துணை வேண்டும் என்பதே தேவதிட்டம். அதை நிறைவேற்றவும், குடும்பத்தின் தலைவன் கணவன்தான் என்றும் அவருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதே அவனுடைய மனைவிக்கு நியமிக்கப்பட்ட காரியமாக இருக்கிறது. (எபே. 5:22-24).

ஒவ்வொரு பெண்ணையும் ஒவ்வொரு தாலந்துடன் தேவன் படைத்திருக்கின்றார். எனினும், எல்லா பெண்களும் தேவனுக்குப் பயந்து தன் சொந்த புருஷனுக்கு கீழ்ப்படிந்து வாழ்வதே தேவகட்டளை யாகும். பிள்ளையானவன் தாய், தகப்பனுக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும் (எபே. 6:1-3).

### கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள்:

வேதம் தெளிவாக சொல்கிறது, தேவன் தமது சாயலாகவே பெண்ணையும் படைத்தார் (ஆதி. 1:27) எனவே, ஒவ்வொரு பெண்ணும் மதிப்பிற் குரியவர்கள் தான் என்பதை முதலில் நாம் புரிந்துகொண்டு தேவ சாயலை வெளிப்படுத்தும் வாழ்க்கையாக இயேசுகிறிஸ்துவினாலே பாவ மன்னிப்பை பெற்ற நாம் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ வேண்டும்.

### சமூகத்தின் எதிர்ப்பார்ப்புகளுக்கு அப்பால்:

ஒரு பெண்ணின் நோக்கம் நாம் வாழும் சமூகத்தின் விதிமுறைகளால் நிர்ணயிக்கப்படவில்லை. மாறாக, கடவுளுடனான அவளுடைய உறவு மற்றும் அவர் அவளுக்கு அருளின பரிசுகள் (தாலந்து) மூலமாக வெளிப்பட வேண்டும். நாம் செய்யும் எந்த ஒரு செயலும் தேவதிட்டமா? நோக்கமா? என்று சிந்தித்து செயல்பட வேண்டும். (1தீமோ. 2:10-15).

### செல்வாக்கு செலுத்தும் சாமர்த்தியம்:

பெண்கள் தங்கள் செயல்கள், வார்த்தைகள் மற்றும் குணாதிசயங்கள் மூலம் மற்றவர்களை செல்வாக்கு செலுத்தி ஊக்குவிக்கும் திறனை கொண்டுள்ளனர் (நீதி. 31:26). அவிசுவாசியான தன் கணவனை தங்கள் நற்செயல்களினாலே, மாற்ற முடியும் என்கிறது வேதாகமம் (1பேதுரு 3:1,2).

### ஒரு நோக்கமுள்ள பெண்ணின் குணங்கள்:

விசுவாசமான மேற்பார்வையாளர் (நீதி. 31:15)
இரக்கமுள்ள இருதயம் (நீதி. 31:20)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ"

## தாழை



தாழை மலர் (Pandanus fascicularis) தற்காலத்தில் தாழம்பூ என அழைக்கப்படுகிறது. நீர்நிலைகளின் கரைகளில் இவை செழித்து வளரும். தாழம்பூவை மகளிர் தலையில் சூடிக்கொள்வர். கூந்தலில் சடை பின்னும்போது சேர்த்துப் பின்னிக்கொண்டும் மணம் கமழச் செய்வர்.

கைதை என்னும் மலரும் இதன் இனம். கைதை மேட்டுநிலங்களிலும் மழைநீர் வளத்தில் வளரும். கடற்கரை மணல்வெளியில் வளர்வது கைதை. தாழை என்பது சூடும் பூ. கைதை என்பது நிழல் தரும் மரம். தாழைமர இலைகளை மடல் என்பர். தாழைமடல்களைக் கொண்டு குடை செய்வர். தலையில் தொப்பி போலப் போட்டுக்கொள்ளும் குடையாகவும், மழைக்குக் கையால் பிடித்துக்கொள்ளும் குடையாகவும் இது தைக்கப்படும். இதன் வாசனைக்காக இதனை உணவில் சேர்ப்பார்கள்.

வலிமை (மனதில்) – நீதி. 31:25
பகுத்துப் பார்க்கும் குணம் (நீதி. 31:1)

**வேதத்திலே அப்படி வாழ்ந்த சில நபர்கள்:**

எஸ்தர் (எஸ்தர் புத்தகம்)
தெபோராள் (நியாயா. 4,5)
மகதலேனா மரியாள் (லூக்கா 8:2)

**எஸ்தர்:** தன் சொந்த மக்களை கஷ்டத்திலிருந்து காப்பாற்ற தனது பதவியைப் பயன்படுத்திய ஒரு துணிச்சலான, தைரியமான பெண்.

**தெபோராள்:** இஸ்ரவேல் மக்களை போரில் வெற்றிக்கு வழிநடத்திய ஒரு சக்தி வாய்ந்த தலைவி (நியாயா. 4,5),

**மகதலேனா மரியாள்:** அதிகமான, ஆழமான பக்தியை இயேசுவின் மீது கொண்டிருந்த ஒரு பெண். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு ஒரு முக்கிய சாட்சியானாள். (லூக்கா 8:2).

**நாமும் நமது நோக்கத்தை / நம் வாழ்வில் தேவதிட்டத்தை கண்டறிதல் வேண்டும்:**

அதிக அதிகமாக ஜெபம் செய்ய வேண்டும் வேதத்தை தியானிக்க வேண்டும். வேத வசனத்தை ஊழியர்களின் மூலம் கேட்க நாம் எப்போது ஆர்வமாக இருக்க வேண்டும். இவைகளின் மூலமாகவே நம் நோக்கத்தை நாம் கண்டறிய முடியும்.

நம்முடைய ஈடுபாடு அதிகமாக கடவுளுடைய காரியங்களில் இருக்க வேண்டும். நம் நோக்கமும், நம் சிந்தனையும் அதே குறித்தே இருக்க வேண்டும்.

நோக்கமுள்ள ஒரு பெண்ணின் பயணம், வாழ்நாள் முழுவதும் தொடரும். ஒரு இலக்குடன் முடிவது இல்லை. தேவதிட்டத்தை தேடி தேடி கண்டறிந்து தன் விசுவாசத்திலும், சேவையிலும் வளருவாள்.

பிரியமானவர்களே! நாமும் ஒரு வெற்றியுள்ள கடவுளுக்குள் நோக்கமுள்ள ஒரு பெண்ணாக தினமும் வாழ அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும். வேதாகமத்து பெண்மை என்பது தேவ திட்டத்தை நிறைவேற்றுபவள். அவள் நோக்கத்தை கண்டறிவாள்! திட்டத்தை நிறைவேற்றுவாள்! எல்லாவற்றிலேயும் அமைதலோடு, அடக்கமாக இருந்து கற்றுக்கொள்வாள் (லூக்கா 1:42). நாமும் கற்றுக்கொள்வோம், செயல்படுவோம், தேவ ஆசீர்வாதம் பெறுவோம்! (நீதி. 31:31).

**சிந்தனைக்கான கேள்வி**

வேதாகமத்தின்படி ஒரு பெண்ணின் அலங்கரிப்பு என்ன? பதில் அனுப்பவும். வாட்ஸ்ஆப் எண்: 9655332011

– சகோதரி. **பெவர்லி விடியா**

# Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil: Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am. **Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam in Tamil: Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am

**Heaven TV:** Thursday, Friday, Saturday, 6:30-7:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

வாலிபர் பகுதி

# 10 தொழுநோயாளிகள்

பிரியமான வாலிபர்களே! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி யடைகின்றேன். இயேசுவின் அற்புதங்களை படித்து வருகின்றோம். அந்த வரிசையில் இந்த மாதமும் ஒரு அற்புதத்தைக் குறித்து படிப்போம். ஒவ்வொரு அற்புதத்தின் பின்னணியும் நம்மை ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறிச் செல்ல உதவி செய்கின்றது என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

**லூக்கா 17:11–19** வசனங்களில், ஆண்டவராகிய இயேசு 10 தொழுநோயாளிகளை சுகமாக்கியதை பற்றி படிக்கின்றோம். இயேசு சிலுவைக்குப் போகுமுன் கடைசி முறையாக எருசலேமுக்குப் போனார். போகின்ற வழியில் சமாரியா, கலிலேயா நாடுகளின் வழியாக நடந்து போனார். அந்நாட்களில் சமாரியரை அந்நியராக கருதி அவ்வழியாக வரமாட்டார்கள். இயேசுவோ அங்கு ஒரு நோக்கத்தோடு சென்றிருக்கிறார். இயேசு பிரச்சனையுள்ள மக்களைத் தேடிச் சென்று அவரது வல்லமையை விளங்கப் பண்ணி மனதுருக்கத்துடன் அவர்களுக்கு சுகம் கொடுப்பதில் கருத்தாய் இருந்தார். அப்பொழுது ஒரு கிராமத்தின் வழியாக அவர் செல்லும்போது பத்து தொழுநோயாளிகள் இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்ட உடனே சற்றும் தாமதிக்காமல் இயேசுவுக்கு எதிராக வந்து தூரத்திலே நின்றார்கள். **மத். 8:2**ல் இயேசு ஒரு தொழுநோயாளிக்கு சுகம் கொடுத்ததை இவர்கள் அறிந்திருந்தனர்.

இயேசுவைப் பார்த்து, **“இயேசு ஐயரே எங்களுக்கு இரங்கும்”** என்று சத்தமிட்டார்கள். ஐயரே என்ற வார்த்தைக்கு மூல மொழியில் இராணுவத்திலிருக்கும் தலைமைத் தளபதியைக் குறிக்கும். அவர் கட்டளையிட்டால் எல்லாம் நடக்கும். அதேபோல இயேசு கட்டளையிட்டால் தங்களுக்கு சுகம் கிடைக்கும் என்பதால் சத்தமிட்டு கூப்பிட்டு தங்கள் பரிதாப நிலையை தெரிவித்தனர். தொழுநோயாளிகளை தொட்டால் தீட்டு என்பதாலும் **(லேவி. 13:45,46)** அந்த விஷக் கிருமிகள் மற்றவர்களுக்கு எளிதில் தொற்றக்கூடும் என்பதாலும் அவர்கள் அருகில் வரமாட்டார்கள். அவர்கள் ஊருக்கு வெளியே தனிமைப் படுத்தப்படுவார்கள். அந்நாட்களில் தொழுநோய் என்பது குணப்படுத்த முடியாத வியாதி.

**லூக்கா 17:14–16** – இயேசு அந்த 10 தொழுநோயாளிகளையும் பார்த்து சுத்தமாவதற்கு முன்னே ஆசாரியர்களுக்கு உங்களை காண்பியுங்கள் என்றார். இது அவர்களின் விசுவாசத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும் வைத்த சோதனை. ஆசாரியர்களிடம் காண்பிக்க சொல்லிவிட்டதால் குணமாகிவிட்டதாக அர்த்தம் **மத். 8:4**-ல் இதைப்போன்ற ஒரு சம்பவத்தை வாசிக்கின்றோம்.

இயேசு ஒரு தொழுநோயாளியை சுகமாக்கி அதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டு, அவன்போய் ஆசாரியனிடம் காண்பித்து மோசே அதற்கென்று கட்டளையிட்ட காணிக்கையை செலுத்து என்பதைப் பார்க்கிறோம், **லேவி. 13:37**–ன்படி ஆசாரியன் தான் பரிசோதித்துப் பார்த்து குணமடைந்ததைச் சொல்ல வேண்டும் **(லேவி. 13:45,46)** அந்த 10 பேரும் இயேசு நம்மை தொடாவிட்டாலும், ஒரு வார்த்தையாவது சுத்தமானீர்கள் என்று சொல்லவில்லையே! என்று எண்ணாமல், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து போனார்கள். அந்த 10 பேரும் கொடிய வியாதியான தொழுநோயிலிருந்து விடுதலை பெற்றார்கள். ஆனால் அந்த 10 பேரில் ஒரே ஒரு சமாரியன் மட்டும் திரும்ப வந்து சந்தோஷமான நன்றியுள்ள உள்ளத்தோடு, இயேசுவைப் பார்க்க வந்தான். சந்தோஷத்துடன் இயேசுவின் பாதத்தில் முகங்குப்புற விழுந்து, நன்றி செலுத்தினான். இயேசு மற்ற 9 பேர் எங்கே என்று கேட்க ஒருவரிடமும் பதில் இல்லை. திரும்பி வராத 9 பேரும் இயேசுவின் வார்த்தையை நம்பிப்போனவர்கள் தான். ஆனால் நன்றி செலுத்த மறந்தார்கள். இயேசு அந்த ஒரு சமாரியனைப் பார்த்து, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். இங்கே அற்புதம் நிகழ அவர்களின் விசுவாசமே காரணம் என்பதை உணர்ந்து கொள்வோம்.

**எபேசியர் 2:13**ன்படி முன்னே தூரமாயிருந்த நாம் தொழுநோயாளிகளைப்போல, பாவநோயினால் கர்த்தருக்கு தூரமாயிருந்தோம். இப்பொழுதோ இயேசுவின் இரத்தத்தினால் சமீபமாகி அந்த சமாரியன் இயேசுவின் அருகில் வந்ததுபோல நாமும் சபைக்குள் வந்திருக்கின்றோம். கிறிஸ்துவின் வார்த்தைக்கு, வசனம் சொல்கின்றபடி கீழ்ப்படிந்து விசுவாசிக்கும் போது, நம்மேல் இருக்கின்ற யாராலும் குணப்படுத்த முடியாது என்று நினைக்கின்ற பாவ நோயும்கூட திருமுழுக்கிலே சரியாகும் என்பதை உணர்ந்து கொள்வோம். ஏனென்றால், **எபிரெயர் 4:12**-ல் தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது, இருதய நினைவுகளைக்கூட வகையறுக்கக்கூடியது. தீராத தொழுநோய் இயேசு வார்த்தையால் சுகமாக்கப்பட்டதை பார்க்கிறோம். நாமும் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதின்படி வாழ, நன்றியறிதலோடு வாழ பிரயாசப் படுவோம். தேவன்தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

– உங்கள் அண்ணன் **JP**

சிறுவர் பகுதி

# அன்னாளின் ஜெபம்

கர்த்தருக்குப் பிரியமான செல்லப் பிள்ளைகளே கர்த்தருடைய நாமத்தில் உங்களுக்கு மகிழ்ச்சியும், சமாதானமும் உண்டாவதாக. இந்த மாதம் பழைய ஏற்பாட்டில் சாமுயேல் நூலில் சொல்லப்பட்டுள்ள அன்னாள் அம்மாவின் ஜெபத்தைக்குறித்து நாம் படிக்கலாம்.

இஸ்ரயேல் நாட்டிலுள்ள எப்பிராயீம் மலை தேசத்தில் ஒரு மனுசன் இருந்தார். அவர் பெயர் எல்க்கானா, அவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். ஒரு மனைவியின் பெயர் அன்னாள் மற்றொரு மனைவியின் பெயர் பெனின்னாள். பெனின்னாளுக்கு நிறைய பிள்ளைகள் இருந்தார்கள். ஆனால் அன்னாளுக்கு பிள்ளைகள் இல்லை. பெனின்னாள் அன்னாளை உதாசீனமாகவும், கேவலமாகவும் எண்ணினாள். இவர்கள் எல்லாம் வருடத்திற்கு ஒருமுறை சீலோவில் உள்ள வழிபாட்டுக் கூடாரத்திற்கு ஒரு தடவை போனபோது, தன் அன்பு மனைவி அன்னாள் ரொம்பச் சோகமாக இருப்பதை எல்க்கானா பார்த்தார். அதனால் அவளிடம் அன்னாளே அழாதே உனக்குத்தான் நான் இருக்கிறேனே! நான் உன்மேல் உயிரையே வைத்திருக்கிறேன் என்று சொன்னார்.

ஆனால் அன்னாள் அம்மா எதுவும் பேசாமல், தனக்குள் இருந்த வேதனையை யாரிடமும் சொல்லாமல், தனக்குள் இருந்த பிரச்சனைகளுக்காக தீர்வுக்கான சர்வ வல்லமையுள்ள தேவனிடம் நீண்ட நேரம் மனங்கசந்து நோக்கி ஜெபம் செய்தாள். அவளால் தன் அழுகையை அடக்க முடியவில்லை. கர்த்தாவே! நீங்கள் எனக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால் அவனை



உங்களுக்கு கொடுத்து விடுவேன், வாழ்நாள் முழுவதும் அவன் உங்களுக்குச் சேவை செய்வான் என்று பொறுத்தனை செய்தாங்க. அன்னாள் இவ்வாறு தேம்பித்தேம்பி அழுவதைத் தலைமைக் குருவான ஏலி பார்த்தார். அவர் அன்னாளை நோக்கி நீ விண்ணப்பம் பண்ணினபடியே கடவுள் உனக்குத் தருவார் என்றார். அன்னாளுக்கு இப்போது கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. கர்த்தரிடம் வேண்டிக்கொண்ட பிற்பாடு அவள் துக்கமுகமாயிருக்கவில்லை, அவள் அங்கிருந்து எழுந்துப்போனாள்.

பிள்ளைகளே! அன்னாள் அம்மா கர்த்தரிடம் கேட்ட விண்ணப்பத்தின்படியே, கர்த்தரிடத்தில் அன்னாள் கேட்டபடியே ஆண் பிள்ளையைக் கொடுத்தார். அந்தக் குழந்தைக்கு சாமுயேல் என்று பெயர் வைத்தார். பிள்ளைகளே கர்த்தரிடம் சொன்ன வாக்குறுதியை அன்னாள் மறக்கவில்லை. சாமுயேல் வளர்ந்ததும் அவனை தேவலாயத்திற்கு அழைத்து வந்து ஏலியிடம் ஐயா நான் கடவுளிடம் கேட்ட மாதிரியே அவர் எனக்கு இந்தக் குழந்தையைக் கொடுத்தார். வாழ்நாள் முழுவதும் அவன் தேவனுக்குப் சேவை செய்யட்டும் என்று சொன்னாள். எல்க்கானாவும் அன்னாளும் சாமுயேலைப் பார்க்க ஒவ்வொரு வருஷமும் போவார்கள்.

பிள்ளைகளே! அன்னாள் அம்மாவின் ஜெபத்தைக்குறித்து சற்று கவனிப்போம். அன்னாள் அம்மா தனக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டதும் மற்ற யாரிடமும் சொல்லாமல் அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம் செய்தாள். பிறகு மனங்கசந்து அழுது தன்னுடைய வாக்குறுதியை வெளிப்படுத்தினாள். பிறகு அந்த வேண்டுதலைக் கர்த்தர் கேட்டார். பிள்ளைகளே நீங்களும் நம் தேவனிடம் கேட்கும்பொழுது உங்களுக்கு எல்லாவற்றையும் கொடுப்பார். நமது ஆண்டவரும் அதைத்தான் சொல்லியுள்ளார். கர்த்தரிடம் விசுவாசத்தோடும். உறுதியோடும் கேட்கும் பொழுது நிச்சயம் நம் வேண்டுதலுக்கு பலன் கொடுப்பார். சர்வ வல்லமையுள்ள தேவன் உங்களோடு இருப்பாராக ஆமென்.

**மனப்பாட வசனம் : மத்தேயு 7:7** “கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்”

— சகோ. பீட்டர்

சிறுவர் பகுதி

# கர்த்தர் மனிதனைப் படைத்தார்

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைங்களா! எல்லாரும் எப்படி இருக்கிங்க?. இந்த மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி சொன்னீங்களா?. பரிசுத்த தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இந்த மாதம் கர்த்தர் படைத்த படைப்புகளிலேயே மிகவும் அதிசயிக்கத்தக்க படைப்பான மனிதனை எவ்வாறு படைத்தார் என்பதைப் பற்றி படிக்கலாமா? வாங்க படிக்கலாம்.

ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பூமியில் வாழும் உயிரினங்களிலேயே மிகவும் ஞானம் நிறைந்த மனிதனைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் அதே ஆராய்ச்சியாளர்கள் மனிதனை குரங்கிலிருந்து வந்ததாக கூறுகின்றனர். மனிதன் குரங்கிலிருந்து வந்ததை எந்த அறிவியல் ஆராய்ச்சியாளர்களும் நேரில் காணவில்லை. ஆனால் குரங்கானது மனித சாயலில் இருப்பதால் மனிதன் குரங்கிலிருந்து வந்திருப்பான் என்று ஒரு யூகமாக கூறுகின்றனரே தவிர. அது உண்மையானது அல்ல, செல்லப் பிள்ளைகளா இன்றும் நம்மால் மனிதக் குரங்குகளைக் கண்களால் காண முடியும். ஆனால் எந்த குரங்கும் மனிதனாக மாறியதை யாரும் காணவில்லை. அப்படியென்றால் மனிதன் குரங்கிலிருந்து வரவில்லை என்பது உறுதியாகிறது அல்லவா. அப்படியென்றால் மனிதன் எங்கிருந்து வந்தான்? என்பதை பைபிள் நமக்கு கற்றுக்கொடுக்கிறது.

பைபிளில் ஆதியாகமம் 2 ஆம் அதிகாரம் 7 ஆம் வசனத்தில் மனிதனைக் கர்த்தர் பூமியின் மண்ணினாலே படைத்தார் பிறகு கர்த்தர் உயிருள்ள சுவாசத்தை அதாவது மூச்சுக் காற்றை மனிதனுடைய நாசியிலே மூக்கிலே) ஊதினார் மனிதன் உயிருள்ள ஆத்துமாவை உடையவனானான் என்பதைக் கூறுகிறது. கர்த்தருக்கு பிரியமான செல்லங்களா, மனிதன் என்ற உயிரினம் படைக்கப்பட்ட வரலாறு பைபிளில் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதியாகமம் 2 :19-ம் வசனத்தில் கர்த்தர் மனிதனை பூமியில் உள்ள மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் பெயரிடும்படி வைத்தார். மனிதன் எந்தெந்த மிருகங்களுக்கு என்னென்ன பெயரிட்டானோ அவைகளுக்கு அதுவே பெயராயிற்று. என்று பைபிள் கூறுகிறது. செல்லங்களா கர்த்தர் மனிதனை அறிவு நிறைந்தவனாக படைத்துள்ளார் என்பதை இதிலிருந்து நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஒருவேளை மனிதன் குரங்கிலிருந்து வந்திருந்தால் இந்த அளவிற்கான அறிவு இருந்திருக்குமா? இன்றும் குரங்குகள் உள்ளது. எந்த குரங்கும் யாரிடமும் பேசியதில்லை என்பது நமக்கே தெரியும். மனிதன் குரங்கிலிருந்து வரவில்லை.



ஆதியாகமம் 2:21-23 வரை வாசித்துப் பார்த்தால் கர்த்தர் மனிதனுக்கு அயர்ந்த நித்திரையை வரவைத்து. மனிதனுடைய விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து மனுஷியை (பெண்ணை) படைத்தார். அவர்கள் இருவரும் இணைந்து அநேக சந்ததியினரை உருவாக்கினார்கள். நாம் பிறந்தது நம்முடைய தாய் மற்றும் தந்தை ஆகிய இருவாராலே அல்லவா. நம்முடைய சந்ததி பெருகும்படி கர்த்தர் மனிதனை கணவன் மனைவியாக படைத்தார். அறிவியல் அறிஞர்கள் சொல்வது போல மனிதன் குரங்கிலிருந்து வந்திருந்தால், முதலில் வந்தது ஆண் குரங்காக இருந்திருந்தால் எப்படி இனப்பெருக்கம் அடைந்திருக்கும்?. அவர்கள் கூறுவது எல்லாம் கற்பனையான முடிவுகள் ஆகும். ஆனால் பைபிள் கூறுவது வரலாறு ஆகும்.

**மானப்பாட வசனம் : ஆதியாகமம் 2:7 "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்"**

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) | M. அபி பிலேமோன் | – | எழுகம்வலசு |
| 2) | M. ஜோனத்தான் | – | கரூர் |
| 3) | A. சுபிக்ஷா | – | பெருமாள் வலசு |
| 4) | A. சாம்குமார் | – | பெருமாள் வலசு |
| 5) | A. ஹானா ஜோதிராணி | – | மதுரை |
| 6) | V. ஏஞ்சல் ஜோயன்னா | – | மதுரை |
| 7) | J. நவீன் பீட்டர் | – | மதுரை |
| 8) | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | – | மதுரை |
| 9) | S. ஜூடா லியோ | – | ரஸ்தா |
| 10) | G. ஜெர்லின் | – | ரஸ்தா |


சிறுவர் பகுதி

# எரிகோவை வேவுபார்த்தல்

கடவுளின் செல்லங்களா! நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? நல்லாயிருக்கிறீர்களா? சென்றமாதம் சிறுவர் பகுதிகளில் வந்த பைபிள் சம்பவங்கள் எல்லாவற்றையும் படித்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

இந்த மாதம்கூட ஒரு சம்பவத்தை பற்றி படிக்க இருக்கிறோம். எரிகோ என்ற ஒரு பட்டணம் இருந்தது, அந்த பட்டணம் கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு வாக்குத்தத்தம் செய்த, அந்த தேசத்தின் நுழைவாய்தான் எரிகோ பட்டணம், அந்த பட்டணத்துக்குள் போகனும் என்றால் அங்கு யார் இருக்காங்க. அந்த வழியாய் போகமுடியுமா? என்று வேவு பார்க்க யோசுவா ஆள் அனுப்புகிறார். ஏனென்றால் எரிகோவில் அமெலேக்கியர்கள் வாழ்ந்து வந்தார்கள். எரிகோவை சுற்றி மிகவும் பிரம்மாண்டமான கோட்டைச் சுவர் கட்டப் பட்டிருந்தது. அந்த கோட்டைச் சுவர்மேல்தான் ராகாப் என்ற ஒரு அக்கா வீடு இருந்தது. இப்ப இரண்டு ஒற்றர்கள் இந்த எரிகோவை வேவுபார்க்க போகிறார்கள், இது எரிகோ மக்களுக்கு தெரிந்தது. உடனே இவர்கள் ராகாப் அக்கா வீட்டில் போய் ஒளிந்திருக்கிறார்கள். ராகாப்பிடம் வந்து, யாரும் வந்தார்களா? என்று கேட்டதற்கு யாரும் வரவில்லை என்று சொல்லி இந்த இரண்டு ஒற்றர்களை காப்பாற்றிவிட்டாங்க, இப்ப இந்த ஒற்றர்கள் யோசுவாவிடம் போய் என்ன சொன்னார்கள் தெரியுமா?

நாம் சுலபமாக இந்த எரிகோ பட்டணத்தை பிடித்துவிடலாம் அங்குள்ள மக்கள், பெரிய பலசாலி அல்ல என்று சொன்னார்கள். ஏன் தெரியுமா?



கடவுளை நம்புகிறவர்கள் எதையும், யாரையும் பார்த்து பயப்பட வேண்டியதில்லை. அதனால் விசுவாச வார்த்தைகளை பேசினார்கள். அந்த பட்டணத்திலும் கடவுளுக்கு முன்பாக இவர்கள் சாதாரணமானவர்கள் என்று கடவுளின் மீதுள்ள விசுவாசத்தை வெளிபடுத்தினார்கள். எரிகோ பட்டணம் பிடிக்கப்பட்டது.

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! நீங்களும், உங்கள் பள்ளி பாடங்களை படிக்க முடியல, பைபிள் படிக்க முடியல, ஜெபிக்க முடியல, கஷ்டமாக இருக்கு என்று சொல்லாமல், கடவுள் எனக்கு உதவி செய்வார். கஷ்டமான பாடத்தையும் சுலபமாக படித்துவிடுவேன். கடவுள் எனக்கு உதவி செய்வார் என்று விசுவாசத்தை அறிக்கையிட்டு, நம்பிக்கையோடு படிக்கனும். பைபிளையும், நம்பிக்கையோடு படிக்கனும். நம்பிக்கையோடு ஜெபிக்கனும், செய்வீர்களா? கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: லூக்கா 8:48 "..உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்."**

– சகோ. அன்பு ஏசுதாஸ்

## பொதுவான செய்திகள்

முன்மாதத் தொடர்ச்சி...

நமது அலைபேசியில் 112 என்ற எண் மட்டும் எந்த நிலையிலும் எப்போதுமே, எல்லா மாநிலம், எல்லா தேசத்திலும் இயங்கும். நமது அலைபேசி லாக்கில் (Locked) இருந்தாலும் இந்த எண்கள் மட்டும் இயங்கும். இது அனைத்திற்குமான அவசர உதவி எண்.

பேருந்துகள் சரியான நேரத்திற்கு வராதது, நடத்துநர் மீதி சில்லரையைக் கொடுக்காதது அல்லது குடித்து விட்டோ, செல்போன் பேசிக்கொண்டோ ஓட்டுநர் பேருந்தை ஓட்டுவது போன்ற புகார்களுக்கு: 93833 37639

பொருட்கள் வாங்கும் கடைகளில் ஏமாற்றப்படுகிறீர்கள் என்றால் மாநில நுகர்வோர்க்கு Toll Free No: 18001l400, 94454 64748, 72999 98002, 72000 18001, 044-28592828

மனரீதியாக பாதிக்கப்பட்ட, ஆதரவற்ற பெண்களைப் பாதுகாக்க: 044 -26530504 / 26530599

ரயில் பயணங்களின்போது பெண்களுக்கு ஆபத்து ஏற்பட்டால்: 044- 25353999 / 90031 61710 / 99625 00500

ஆட்டோவில் அளவுக்கதிகமான குழந்தைகளை ஏற்றிச்சென்றால்: 044-24749002 / 26744445

# எகிப்தின் 10 வாதைகள்

யாத்திராகமம் 8 – 12 அதிகாரங்கள்

செல்ல குழந்தைகளே! உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள், தேர்வு எழுதுகிற இந்த நாட்களிலே தேவன் உங்களுக்கு படிப்பில் ஞானத்தையும், வாழ்விலே கிருபையையும் அதிகமாய் கொடுப்பாராக. படித்த பாடங்களை தேவனின் துணையோடும், ஜெபத்தோடும் எழுதுங்கள். நிச்சயம் அவர் உங்களுக்கு இந்த ஆண்டு தேர்விலே வெற்றி தருவார்.

இந்த புதிய மாதத்திலே நாம் இஸ்ரயேல் (யாக்கோபின் சந்ததி) ஜனங்களையும், அவர்களை கொடுமைப் படுத்திய ராஜா பார்வோனைப் பற்றியும், தேவன் அவர்களை எவ்வாறு விடுவித்தார் என்பதனைக் குறித்தும் நாம் பார்க்க போகிறோம்.

எகிப்து தேசத்தில் இஸ்ரயேல் (யாக்கோபின் சந்ததி ஜனங்கள் ஏறக்குறைய 430 வருடங்கள் அடிமையாக வாழ்ந்தனர். அப்போது அவர்கள் தேவனை சுதந்திரமாக தொழுகை செய்ய முடியாதபடி அந்நாட்டு ராஜா பார்வோன் மிகவும் கடினமாக வேலை கொடுத்து மிகவும் கொடுமைப்படுத்தினான். இதனால் ஜனங்கள் விருப்பமில்லாத, வேண்டாவெறுப்புடன் இருந்து வந்தார்கள். அவர்கள் தேவனை நோக்கி தினந்தோறும் முறையிட்டு, தேவரீர் இந்த பார்வோன் கையிலிருந்து எங்களை விடுதலை செய்து, நாங்கள் சுதந்திரமாய் உம்மை ஆராதிக்க (தொழுகை செய்ய) உதவும் என்று அனுதினமும் முறையிட்டு, அழுது ஜெபித்தனர்.

தேவன் அவர்களது கூக்குரலைக்கேட்டு, அவர்களை விடுவிக்க சித்தமானார். அப்போது தேவன் அவர்களின் நடுவிலே ஒரு தீர்க்கதரிசியாக மோசேயை ஏற்படுத்தி, பார்வோனிடம் சென்று பேசும்படி ஆயத்தம்செய்தார். அவர் பலமுறை சென்று பார்வோனிடம் பேசியும், ராஜாவுக்கு இஸ்ரயேல் ஜனங்களை அனுப்ப மனதில்லை. முடியாது என்று மறுத்துவிட்டார். இதனால் தேவன் எகிப்தின் ராஜா முதற்கொண்டு எகிப்தின் ஜனங்கள் எல்லார்மேலும் 10 வாதைகளை (தண்டனையை) அனுப்பினார். அது எவை எவைகள் என்று தெரியுமா குட்டீஸ்?

1) எகிப்தின் நீர்நிலைகள் இரத்தமாக மாறினது. 2) தேசம் முழுக்க தவளைகள் வந்தது. 3) பேன்கள் வந்தன. 4) பலவித வண்டுக்கள் வந்தது. 5) மிருகஜீவன்கள் எல்லாம் மாண்டுபோயின. 6) எகிப்தின் மனிதர்கள்மேல் கொப்பளங்கள் வந்தது. 7) கொள்ளை நோய்கள் வந்தது. 8) வெட்டுக்கிளிகள் வந்தன. 9) எகிப்து தேசம் முழுவதும் காரிருள் மூடியது. இறுதியாக, 10) எகிப்திலிருந்த முதற்பிறந்த பிள்ளைகள் யாவும் மாண்டுபோயினர். இவ்வாறாக தேவன் எகிப்து தேசம் முழுவதும் பார்வோனின் நிமித்தமாக, அவன் இஸ்ரயேல் ஜனங்கள் தேவனை ஆராதிக்க விடமாட்டேன்




என்று சொன்னதால் இந்த 10 வாதைகளை அனுப்பினார். ஆனால் இஸ்ரயேல் மக்களை இந்த வாதைகளில் ஒன்றும் சேதப்படுத்தவில்லை. என்ன ஆச்சரியம் பாருங்க குட்டீஸ்! இதை நாம் மறக்கக்கூடாது.

எனவே, செல்ல பிள்ளைகளே! தேவனை நாம் ஆராதிக்க (தொழுகை) வாரத்தின் முதல்தோறும் தவறாமல் சபைக்கு செல்ல வேண்டும் என்பதை அவர் விரும்புகிறார். நமக்கு நல்ல சூழ்நிலை, சபையார், அம்மா, அப்பா மற்றும் எல்லாவற்றையும் தேவன் கொடுத்திருக்கிறாரே அவைகள் நிமித்தம் தேவனுக்கு நன்றி சொல்லுவோம். கடவுளை நேசித்து, வேதவாசிப்பு, ஜெபம் மற்ற எல்லா காரியங்களையும் அவர் விரும்புகிறபடி செய்வோமா குட்டீஸ்! அடுத்த இதழில் சந்திப்போமா!

**மனப்பாட வசனம் : சங்கீதம் 145:19** "அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்"

**– சகோ. ஜான் செல்லையா**

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. அன்னாள் அம்மா தனது வேண்டுதலை யாரிடம்? எப்படி சொன்னாங்க?
2. தேவன் மனுஷியை (பெண்ணை) எப்படி படைத்தார்?
3. வேவுகாரர்களை (ஒற்றர்களை) காப்பாற்றினது யார்? அவர்கள் யோசுவாவிடம் சென்று என்ன சொன்னார்?
4. தேவன் எகிப்து தேசத்தின்மேல் எத்தனை வாதைகளை அனுப்பினார்? அதில் 8வது வாதை என்ன?
5. தேவன் எதற்காக எகிப்து தேசத்தின்மேல் வாதைகளை (தண்டனை) அனுப்பினார்?

## மார்ச் மாத கேள்விகள்

(அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இருந்து)

1. அப்போஸ்தலர்கள் என்ன ஞானஸ்நானம் பெறுவார்கள் என்று சொல்லப்பட்டது?
2. நாற்பது நாளளவும் கிறிஸ்து யாருக்கு தரினமாகி என்ன செய்தார்?
3. பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற அப்போஸ்தலர்கள் எங்கே காத்திருக்க வேண்டும்?
4. எருசலேமிற்கும், ஒலிவ மலைக்கும் இடைப்பட்ட தூரம் என்ன?
5. அப்போஸ்தலர்கள் அந்நியபாஷையில் பேசியது என்னவென்று மக்கள் சொன்னார்கள்?
6. பேதுரு எத்தனை பேருடன் எழுந்து நின்று பேசினார்?
7. சிலுவையில் அறைந்த இயேசுவை தேவன் என்னவாக்கினார்?
8. பாவமன்னிப்பு பெற என்ன செய்யவேண்டும் என பேதுரு சொன்னார்?
9. இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் என்ன செய்தார்?
10. அன்றைய தினம் எத்தனை பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-03-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. அப். 7:56,59 | 6. அப். 11:26 |
| 2. அப். 8:9,13 | 7. அப். 16:12,16 |
| 3. அப். 8:27,30 | 8. அப். 16:14 |
| 4. அப். 9:17,18 | 9. அப். 19:19 |
| 5. அப். 10:7 | 10. அப். 22:3 |

## சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்


| | | |
|---|---|---|
| 1) | Mr. ஜோசப் ராஜா | ஒட்டன்சத்திரம் |
| 2) | K. கோகிலா அருண்நோவா | ஒட்டன்சத்திரம் |
| 3) | Mrs.D. குளோரி திலகவதி | சென்னை |
| 4) | Mrs. ஈஸ்வரி முருகன் | கரூர் |
| 5) | Mrs. C. வள்ளி சிதம்பரம் | கரூர் |
| 6) | Mrs. J. பூங்கொடி | முத்தூர் |
| 7) | M. ராஜா | கரூர் |
| 8) | Mrs. சூரிய பிரியா | மதுரை |
| 9) | Mrs. தெல்மா ஸ்டான்லி | மதுரை |
| 10) | A. டேவிட் ஜெயசந்திரன் | மதுரை |
| 11) | D.I.அன்பு சுதந்திரம் | நெல்லை |
| 12) | Mrs. நளினி செல்வராஜ் | குன்னூர் |
| 13) | Mrs. ஹெப்ஸி தாமஸ் | படப்பை |
| 14) | Mrs. பெரில் பாஸ்கர் | படப்பை |
| 15) | Mrs. அன்னத்தாய் ஆல்பர்ட் | தூத்துக்குடி |
| 16) | Mrs. மேரி ராஜ் | மதுரை |
| 17) | Mrs.P. சமாதானம் பீட்டர் | விருதுநகர் |
| 18) | G.A. டேவி | மதுரை |
| 19) | Mrs. ஸ்டெல்லா ஜெபகுமார் | நெல்லை |
| 20) | Mrs. தேவி ராஜாசிங் | திருப்பூர் |
| 21) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 22) | J.V. சுந்தரபாய் வில்லியம் | சேலம் |
| 23) | C. வைலட் கிறிஸ்டோபர் | மதுரை |
| 24) | G. ஏஞ்சலம்மாள் | மதுரை |
| 25) | Mrs. சாந்தி வில்லியம் | புதுக்கோட்டை |
| 26) | R. ஞானசிரோன்மணி | மதுரை |
| 27) | S. டேவிட் சாந்தகுமார் | வல்லம் |
| 28) | Mrs.A. இமால்டா சுந்தர்சிங் | ஈரோடு |
| 29) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | மதுரை |
| 30) | M. பியூலா சாந்தி | ஈரோடு |
| 31) | N. ஜான் செல்லையா | மதுரை |
| 32) | J. ஜெயராணி ஜான் | மதுரை |
| 33) | A. கார்பஸ் பிலேமோன் | மதுரை |
| 34) | Mrs. இந்திரா பாண்டி | மதுரை |
| 35) | A. ரோஸ்மேரி | சென்னை |
| 36) | Mrs. சாந்தி ஜோயல் | திருச்சி |
| 37) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | சேலம் |
| 38) | Mrs. காந்தா மனோகரன் | திருச்சி |
| 39) | Mrs. பட்ரிசியா டேவிட் | சேலம் |
| 40) | S. அசோக்குமார் பிரின்ஸ் | தூத்துக்குடி |
| 41) | S. பாக்கியராஜம் | மதுரை |
| 42) | Mrs. ராணி குமரன் | கரூர் |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : **45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at **THEE CLASSIC PRINTERS, KAKA THOPPU, MADURAI - 1 📖 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2024 - 2026**
**Date of Publication : 9th March 2025**
**Posted at Arasaradi HPO on 10th & 11th March2025**

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்










அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To